**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.71/2020**

2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 28 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. Dr.முருகேஸ்குமார் (அ.சா.10) | தொழில் | : அரசு உதவி மருத்துவர் |
| த/பெ., க/பெ. | : பழனிச்சாமி | வயது | : 40 |
| கிராமம் | : பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 28.01.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் தற்போது பழனி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.06.2016 அன்று காலை 9.15 மணியளவில் திவ்யகுமார், வயது 19, த/பெ.முருகேசன், 8 வது வார்டு, சத்யா நகர், பழனி என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் 29.06.2016 அன்று காலை 8.30 மணியளவில் காரமடை என்ற இடத்தில் தாக்கியதாகக்கூறி சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு (1) 10 x 6 x 2 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் இடதுபக்க முன்னங்கை முட்டியில் இருந்தது. (2) 5 x 2 x 1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் தலையின் மேல்பகுதியில் இருந்தது. (3) 8 x 2 x 1 செ.மீ.அளவுள்ள கிழிந்த காயம் இடது கை முன்னங்கையில் இருந்தது. (4) 2 x 1 x 1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் இடதுபக்க மணிக்கட்டில் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தோம். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளித்தேன். விபத்துப்பதிவேடு காயச்சான்றுடன் கூடியது அ.சா.ஆ.6. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை :–**

காவல் ஆய்வாளர் என்னை எந்த தேதியில், எத்தனை மணிக்கு விசாரித்தார் என்று கேட்டால் ஞாபகமில்லை. விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றை எந்த தேதியில், யாரிடம் கொடுத்தேன் என்றால் அவர்கள் மருத்துவமனை அலுவலகத்தில்தான் மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொள்வார்கள், எங்களிடம் நேரடியாக பெறும் வழக்கம் கிடையாது. காயம்பட்ட நபர் தன்னை தாக்கிய நபரின் பெயர் மற்றும் அடையாளம் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்ற விபரம் விபத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என்றும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னிடம் ஏதாவது ஆயுதத்தை காண்பித்து கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான். சிகிச்சை அளித்தபோது காயம்பட்ட நபரின் ரத்தம் படிந்த துணிகள் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபரை யார் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்பது விபத்து பதிவேட்டில் இல்லை என்றால் நண்பர் பூபதி என்பவர் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ளேன். காயம்பட்ட நபர் வேகமாக ஓடிச்சென்று குத்துக்கல்லில் மோதி, சரளைக்கற்களில் மற்றும் ஜல்லிக்கல்லில் மோதி வேகமாக விழுவதால் 1 முதல் 4 காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.01.28 19:08:06 +0530